**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**O.S.No.49/2023**

PW - 2

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ராமகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் மூன்றாம் தரப்பினர். இந்நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் வா.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். கோயமுத்தூரில் உள்ள எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை **நீ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சக்தி பைனான்ஸ் லிமிடெட்டின் Chief Manager ஆக பணிபுரிந்த வருகிறேன். நீ.ம.சா.ஆ.3 சார்பாக என்னை சாட்சியம் அளிக்குமாறு எங்கள் நிறுவனத்தின் சி.ஏ.ஓ. செந்தில்குமார் அவர்கள் கேட்டு கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

நீ.ம.சா.ஆ.3 ல் தனபால், த/பெ துரைசாமி எங்கள் நிறுவனத்தில் நிரந்தர வைப்பீடுகள் வைத்திருந்தது சம்மந்தமாக குறிப்பாக.FDC Tr. I.D.No.10003135002 சம்மந்தமாக அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த எப்.டி.சி சம்மந்தப்பட்ட விவரங்களை நான் இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். மேற்சொன்ன எப்.டி.யை தனபால் அவர்கள் 12-09-2019 அன்று எடுத்திருந்தார் என்று சொன்னால், சரிதான். அந்த டெபாசிட் தொகை ரூ.63,126/- ஆகும். அந்த டெபாசிட்டின்

காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். அதன் maturity தேதி 12-09-2022 ஆகும். முதிர்வு தொகை ரூ.82,445/- ஆகும். தனபால் அவர்கள் 18-05-2021 அன்று காலமாகி விட்டார். அதனால் அந்த தொகையை அவரது இரண்டாவது மனைவி சரஸ்வதி என்பவர் மனு தாக்கல் செய்தததன் அடிப்படையில் pre close செய்து 04-09-2021 அன்று ரூ.71,634/- கொடுத்தோம். அந்த தொகையை சரஸ்வதி என்பவருக்கு NEFT மூலமாக அனுப்பினோம். அது சரஸ்வதி அவர்கள் வைத்துள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கோயமுத்தூர் மெயின் கிளையில் உள்ள அவரது கணக்கிற்கு அனுப்பினோம். சரஸ்வதி மனு தாக்கல் செய்தபொழுது தனபாலின் வாரிசுகளாக தன்னையும், விக்னேஷ் என்பவரையும் கூறி வாரிசு ஆவணத்தையும் தாக்கல் செய்தார். இரண்டு நபர்கள் வாரிசுகளாக இருக்கும்பொழுது எதன் அடிப்படையில் அந்த தொகையை நாங்கள் சரஸ்வதிக்கு கொடுத்தோம் என்றால், சரஸ்வதியை தனபால் நாமினியாக மனுவில் குறிப்பிட்டிருந்த காரணத்தினால் சரஸ்வதியின் கணக்கிற்கு நாங்கள் அனுப்பினோம். தனபால் அவர்கள் ஆரம்பித்த FD சம்மந்தப்பட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட cumulative deposit receipt ஐ இன்று நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்கிறேன். அதில் நாமினியாக சரஸ்வதியை தனபால் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அந்த ஆவணம் **நீ.ம.சா.ஆ.4** ஆக குறியிடப்படுகிறது. மேலும் சரஸ்வதி அவர்கள் மேற்சொன்ன தொகையை கேட்டு எங்களிடம் மனு தாக்கல் செய்த சமயத்தில் அவரது மனுவுடன் affidvait for legal heir., வாரிசு சான்றிதழ், தனபாலின் இறப்பு சான்றிதழ், சரஸ்வதி அவர்களின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம், சரஸ்வதி அவர்களின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல், அவரது பேன்கார்டின் புகைப்பட நகல், மற்றும் Form 4 nomination for family pension நகலையும் தாக்கல் செய்ததன் அடிப்படையில் சரஸ்வதி அவர்களின்

வங்கி கணக்கிற்கு அந்த தொகையை செலுத்தினோம். மேற்சொன்ன மனுவை சரஸ்வதி அவர்கள் 03-09-2021 அன்று எங்களிடம் கொடுத்தார். மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் எங்கள் நிறுவனத்தின் சீல்களோடு நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது (10 தாள்கள் கொண்டது ). வாதி தனபாலின் வாரிசு என்பதால் அவருக்கும் மேற்சொன்ன தொகையில் பாதி கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னால், சரஸ்வதி அவர்கள் custodiane ஆக தொகையை பெற்றுள்ளார்கள். அவர் வாதிக்கும் கொடுக்கலாம். அதை நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். நீ.ம.சா.ஆ.5 ஐ தவிர சரஸ்வதி வேறு எந்த ஆவணங்களையும் எங்களிடம் கொடுக்கவில்லை.

## பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை

பொதுவாக fixed deposit செய்த நபர் காலமாகி விட்டால் அவர் குறிப்பிட்ட நாமினிக்கு தொகையை கொடுப்பது வழக்கம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சரஸ்வதியை தனபால் நாமினியாக காண்பித்திருந்த காரணத்தினால்தான் அவரிடம் தொகையை கொடுத்தோம். வாதி விக்னேஷ் எங்கள் நிறுவனத்திற்கு வந்திருந்தார். வாதி அவரது தந்தை இறந்த பின்பு எங்கள் நிறுவனத்தின் அவினாசி கிளைக்கு வந்தார். விக்னேஷை இரண்டு வாரத்திற்கு முன்பும் அவினாசி கிளையில் வைத்து பார்த்தேன். அப்பொழுது அவரது தந்தை எங்கள் நிறுவனத்தில் வைத்திருந்த பழைய வைப்பீடுகளை பற்றிய விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டார். விக்னேஷ் எங்கள் அவினாசி கிளைக்கு வந்தபோது குறிப்பாக.FDC Tr. I.D.No.10003135002 பற்றி எங்களிடம் கேட்டு தெரிந்து கொண்டார். எங்கள் நிறுவனம் என்னை சாட்சியம் அளிக்குமாறு கூறியதாக அதிகார ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல்

செய்யாததால் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான்தான் எங்கள் நிறுவனத்தின் Authorised person ஆவேன்.

(7 வது பிரதிவாதி தரப்பில் யாரும் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அதனால் சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது)

**மறு விசாரணை** இல்லை

sd/ ராமகிருஷ்ணன்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.